**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025−ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆடித்திங்கள் 27 ம் நாள்

**இ.ம.எண். 4/2025**

**in**

**அ.வ.எண். 113/2016**

ஞானசௌந்தரி ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

/எதிர்/

1. பாக்கியம்
2. சக்திவேல் ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 22.07.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.K.தங்கராஜ், B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் DW1 ஆன மனுதாரரை ரீகால் செய்து மனுதாரர் தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல்

விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

i) அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர் மற்றும் மற்ற பிரதிவாதிகள் மீது இறந்துபோன தெய்வசிகாமணி கவுண்டரின் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக்கோரியும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை முடிவுற்று வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதார் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை பொறுத்து ஏற்கனவே மனுதாரர் கணவர் தெய்வசிகாமணி கவுண்டர் மீது 2ம் வாதி தாராபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.3/2005ன் நகல் வேண்டி விண்ணப்பித்து இருந்த நிலையில் தற்போதுதான் மேற்படி வழக்கின் வழக்குரையும் மேற்படி வழக்கில் மனுதாரர் கணவர் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையும் மற்றும் மேற்படி வழக்கில் 2ம் வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டி தாக்கல் செய்திருந்த மனு நகல்களும் அதில் மனுதாரர் கணவர் தாக்கல் செய்திருந்த எதிருரை நகல்களும் மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்த ஆவணங்களின் நகல்களும் கடந்த 10.02.2025ம் தேதி தான் கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்தால் மட்டுமே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தெய்வசிகாமணி கவுண்டரின் வாரிசுகள் அல்ல என்பதை மனுதாரரால் நிரூபிக்க இயலும்.

ii) மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க மிக முக்கியமான ஒன்றாகும். மேற்படி ஆவணங்களை பெறுவதில் ஏற்பட்ட காலதாமதம் மனுதாரரால் வேண்டுமென்றோ அஜாக்கிரதையாலோ ஏற்பட்டதல்ல. மேற்படி வழக்கு கோப்பை தேடிப்பிடித்து ஆவணங்களின் நகல்களை பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மேற்படி மனுதாரர் தரப்பில் தாராபுரம் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அ.வ.எண்.3/2005 ல் மேற்படி வழக்குரை, எதிர்வழக்குரை, எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ததில் ஏற்பட்ட ஆவணங்கள் மற்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுக்கள் மற்றும் அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய இருப்பதால் DW1 ஆன மனுதாரரை ரீகால் செய்து பிரதிவாதி தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்திரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

i) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரரே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) அசல் வழக்கில் 15.10.2024 ம் தேதி வாதி தரப்பு வாதுரை முடிந்து மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பு வாதுரைக்காக 07.11.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டது. பின்பு 07.11.2024, 28.11.2024 மற்றும் 07.12.2024 ஆகிய தேதிகளில் மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. பின்பு 10.12.2024–ம் தேதி மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் வாதுரையானது பகுதியாக

கேட்கப்பட்டுள்ளது. 28.12.2024, 06.01.2025, 10.01.2025, 29.01.2025 ஆகிய தேதிகளில் மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பு வாதுரையை நிறைவு செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. இறுதியாக 17.02.2025 ம் தேதி வாதுரைக்கு வாய்தா ஏற்பட்ட பொழுது மனுதாரர்/1 ம் பிரதிவாதியானவர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

iii) தாவாவில் மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்து 03.11.2023–ம் தேதி 1 ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் Close செய்யப்பட்டு வழக்கு விசாரணையானது முடிவு பெற்றுவிட்டது. ஏறத்தாழ 1–1/4 ஆண்டு கழித்து தன் தரப்பு சாட்சியத்தை மீண்டும் Reopen செய்து தன்னை Recall செய்து தன் தரப்பு கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என கேட்டுள்ள இந்த மனுவானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தாவா விசாரணை முடிந்த பின்பு மனுதாரர்/1–ம் பிரதிவாதியானவர் மீண்டும் வழக்கினை Reopen செய்யவோ சாட்சியத்தை Recall செய்யவோ சட்டப்படி இயலாது. மனுதாரர்/1–ம் பிரதிவாதியானவர் தனது சாட்சியத்தில் ஏற்பட்டுள்ள Lacuna–வை நிரப்புவதற்காகவே தன்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். The petition to Reopen and Recall the witness can't be filed legally after trial was over. Moreover it is a belated petition and it is liable to be dismissed. And the prayer sought in the petition is not legally sustainable at this stage. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை

செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாராபுரம் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அ.வ.எண்.3/2005 வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை, எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ததில் ஏற்பட்ட ஆவணங்கள் மற்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுக்கள் மற்றும் அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய இருப்பதால் DW1 ஆன மனுதாரரை ரீகால் செய்து பிரதிவாதி தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்திரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவாவில் மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்து 03.11.2023–ம் தேதி 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வழக்கு விசாரணையானது முடிவு பெற்றுவிட்டது என்றும் ஏறத்தாழ 1–1/4 ஆண்டு கழித்து தன் தரப்பு சாட்சியத்தை மீண்டும் Reopen செய்து கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என கேட்டுள்ள இந்த மனுவானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது எதிர்மனுதாரர்/வாதிகளால் வாதிகள் தான் கடந்த 10.10.2013ம் தேதியன்று இறந்துபோன தெய்வசிகாமணி கவுண்டரின் வாரிசுகள் என விளம்புகை செய்ய வேண்டும்படிக்கும்,

வாதிகளுக்கு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 21.10.2016 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 07.11.2016 அன்று 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கடந்த 03.07.2017 அன்று வாதிகள் தரப்பில் விசாரணைக்கு ஆஜராகாததால் அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு, 23.10.2018 தேதியில் இ.ம.எண்.692/2017 மனுவின் உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 07.11.2016 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

7. பின்னிட்டு கடந்த 17.12.2021 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.28 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 23.09.2022 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 19.07.2023 அன்று பி.சா.1 விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 03.11.2023 அன்று பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 15.10.2024 அன்று வாதிகள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, கடந்த 10.12.2024 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் பகுதி வாதுரை கேட்கப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு வாதுரைக்காக அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 05.06.2025 அன்று அசல் வழக்கில் மேற்கொண்டு ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி DW1 ஆன மனுதாரரை ரீகால் செய்து பிரதிவாதி தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அனுமதியளித்து உத்திரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது 1ம் பிரதிவாதி தரப்பில் 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 2ம் வாதி ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.39/2005 வழக்கை தாக்கல் செய்தததாகவும் அந்த வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 2ம் வாதி அவருடைய மகன் கிடையாது என்று சொல்லியுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி அ.வ.எண்.3/2005 வழக்கின் ஆவணங்கள் மற்றும் 2ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்வதற்காக அசல் வழக்கை மறுதிறப்பு செய்து பி.வா.சா.1 ஐ திரும்ப அழைத்து விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

9. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்து 03.11.2023-ம் தேதி 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வழக்கு விசாரணையானது முடிவு பெற்றுவிட்டது என்றும் தாவா விசாரணை முடிந்த பின்பு மனுதாரர்/1ம் பிரதிவாதி மீண்டும் வழக்கினை Reopen செய்யவோ சாட்சியத்தை Recall செய்யவோ சட்டப்படி இயலாது என்றும் வழக்கில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது இறந்துபோன தெய்வசிகாமணி கவுண்டர் என்பவருக்கு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தான் வாரிசுகள் என்று விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரருக்கு எதிராக 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்

இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் பி.வா.சா.1 தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை குறித்து பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பும் வசதியும் உள்ளது என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய போதிய வாய்ப்புகள் வழங்கியும் அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தற்போது மேலும் தனது தரப்பில் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய பி.வா.சா.1 ஐ திரும்ப அழைத்து விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 1, 2 எதிர்மனுதார்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/1ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 26.08.2025ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 26.08.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2025.08.12 19:53:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2025.08.12 19:53:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.